भारत का राजपत्र
# The Gazette of India
இந்திய அரசிதழ்
असाधारण
**EXTRAORDINARY**
சிறப்பிதழ்
भाग XV अनुभाग 1
**Part XV Section 1**
பகுதி XV பிரிவு 1
प्रधिकार प्रांकाशित
**PUBLISHED BY AUTHORITY**
அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका
New Delhi, Monday, 6th March 2000/1922 Saga
*புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக*

**Ministry of Law, Justice and Company Affairs**
(Legislative Department)
*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*
*(சட்டமியற்றுத் துறை)*

The translation in Tamil of Ancient Monuments and Archaelogical Sites and Remains Act, 1958 (24/1958), The Central Industrial Security Force Act, 1968 (50/1968) are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

தொன்மையான நினைவுச்சின்னங்கள், தொல்பொருள் ஆய்விடங்கள் மற்றும் சிதைவுகள் சட்டம், 1958 (24/1958), மையத் தொழில் நிறுவனப் பாதுகாப்புப் படைச் சட்டம், 1968 (50/1968), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs 16.00

# மையத் தொழில் நிறுவனப் பாதுகாப்புப் படைச் சட்டம், 1968

## (சட்ட எண் 50/1968)

[2 டிசம்பர், 1968]

மைய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் துறை பொறுப்பேற்பு நிறுவனங்கள், குறித்தசில பிற பொறுப்பேற்பு நிறுவனங்கள் ஆகியவற்றையும் அத்தகைய அனைத்து தொழில் பொறுப்பேற்பு நிறுவனங்களில் பணிபுரிவோர் ஆகியோரையும் நன்கு காப்பதற்கும், பாதுகாப்பதற்கும், ஒன்றியத்து ஆயுதப்படை ஒன்றை அமைப்பதற்கும், முறைப்படுத்துவதற்கும், மற்றும் அவற்றோடு தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் பத்தொன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் மையத் தொழில் நிறுவனப் பாதுகாப்புப் படைச் சட்டம், 1968 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதும் அளாவிநிற்கும்.

(3) இது மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறிக்கலாகும் தேதியிலிருந்து செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "தலைமை இயக்குநர்" என்பது, பிரிவு 4இன்படி பதவியமர்த்தப்படும் படையின் தலைமை இயக்குநர் என்று பொருள்படும்;

(அஅ) "படைப்பணியில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்" என்பது, கீழ் நிலை அலுவலர், சார்நிலை அலுவலர் அல்லது படையின் சார்நிலை அலுவலர் ஒருவரின் பதவி நிலைக்குக் குறையாத பிற உறுப்பினர் எவரும் என்று பொருள்படும்;

(அஆ) "படை" என்பது, பிரிவு 3இன்படி அமைக்கப்பட்ட மையத் தொழில்துறை பாதுகாப்புப்படை என்று பொருள்படும்;

(அஇ) "படைக் காவல்" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளுக்கிணங்க படையின் உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்தல் அல்லது சிறையில் வைத்தல் என்று பொருள்படும்;

(ஆ) "தொழிற்துறை பொறுப்பேற்பு நிறுவனம்" என்பது, பட்டியலிடப்பட்ட தொழில்துறை சார்ந்த நிறுவனம் என்று பொருள்படும், மற்றும் பிற தொழில் எதிலும் அல்லது நாடாளுமன்றச் சட்டத்தால் முறைப்படுத்தப்பட்ட பிற தொழில் எதிலும் அல்லது வணிகம், ஆகு தொழில் அல்லது பணி எதிலும் ஈடுபட்டுள்ள பொறுப்பேற்பு நிறுவனம் என்று பொருள்படும்;

(இ) "பொதுத் துறையில் உள்ள தொழில் துறை பொறுப்பேற்பு நிறுவனம்" என்பது,—

(i) நிறுமங்கள் சட்டம், 1956இன் பிரிவு 617இல் பொருள் வரையறை செய்யப்பட்ட அரசாங்க நிறுமத்திற்கும்,

(ii) மைய, மாகாண அல்லது மாநிலச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ நிறுவப்பட்டு,அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அதனால் மேலாண்மை செய்யப்படுகிற கூட்டுருமம் எவற்றிற்கும்

சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அதனால் மேலாண்மை செய்யப்படும் தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனம் என்று பொருள்படும்;

[1][(ஈ) * * * *].

---

1. 14/1983 சட்டத்தினால் கூறு (ஈ) விட்டுவிடப்பட்டது.

(உ) தொழில் துறை பொறுப்பேற்பு நிறுவனம் தொடர்பாக "மேலாண்மை இயக்குநர்" என்பது, (அவர் மேலாண்மை முகவர், பொது மேலாளர், மேலாளர், தலைமை ஆட்சித் துறை அலுவலர் என்றோ அல்லது பிற எந்தப் பெயராலோ அழைக்கப்பட்டாலும்) அந்தப் பொறுப்பேற்பு நிறுவனத்தின் அலுவல்களின் மீது கட்டுப்பாட்டதிகாரம் செலுத்துகிற ஒரு நபர் என்று பொருள்படும்;

(ஊ) "படை உறுப்பினர்கள்" என்பது, இந்த சட்டத்தின்படி அந்தப் படையில் அமர்த்தப்பட்ட ஒரு நபர் என்று பொருள்படும்;

(எ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஏ) "பட்டியலிடப்பட்ட தொழில் துறை" என்பது, தொழில்கள் மேம்பாடு மற்றும் முறைப்படுத்தும் சட்டம், 1951இன் முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள்களை உற்பத்தி செய்வதில் அல்லது தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள தொழில் துறை எதுவும் என்று பொருள்படும்;

(ஏ-அ) "கீழ்நிலை அலுவலர்" என்பது, படையில் ஓர் ஆய்வாளராக, ஓர் துணை ஆய்வாளராக அல்லது ஓர் உதவித்துணை ஆய்வாளராகப் பதவியமர்த்தப்பட்ட ஒரு நபர் என்று பொருள்படும்;

(ஐ) "மேற்பார்வை அலுவலர்" என்பது, பிரிவு 4இன்படி பதவியமர்த்தப்பட்ட அலுவலர்கள் எவரும் என்று பொருள்படும், மற்றும் மைய அரசாங்கத்தினால் படை மேற்பார்வை அலுவலராகப் பதவியமர்த்தப்பட்ட பிற அலுவலர் எவரையும் உள்ளடக்கும்;

(ஒ) "சார்நிலை அலுவலர்" என்பது, ஒரு தலைமைக் காவலர், நாயக் (Naik) அல்லது லான்ஸ் நாயக் (Lance Naik) ஆக படையில் பதவியமர்த்தப்பட்ட ஒரு நபர் என்று பொருள்படும்.

(2) பரப்பிடம் எதிலும் செல்லாற்றலில்லாத சட்டம் ஒன்றிற்காக இந்தச் சட்டத்தில் உள்ள சுட்டுகை எதுவும், அந்தப் பரப்பிடத்தைப் பொறுத்தவரை, அந்தப் பரப்பிடத்தில் செல்லாற்றலிலுள்ள நேரிணையான சட்டம் ஏதேனுமிருப்பின் அதைச் சுட்டுவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

படையினை அமைத்தல்.

3. (1) மைய அரசாங்கத்துக்குச் சொந்தமானதாகவுள்ள தொழில் துறை பொறுப்பேற்பு நிறுவனங்களை நன்கு காப்பதற்கும், பாதுகாப்பதற்கும், மையத் தொழில் துறை பாதுகாப்புப்படை என்றழைக்கப்படும் ஒன்றியத்தின் ஆயுதப்படைப்பிரிவு ஒன்று அமைக்கப்படுதலும், பேணிவரப்படுதலும் வேண்டும்.

(2) அந்தப்படை, வகுத்துரைக்கப்படலாகும் முறையில் அமைக்கப்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் எண்ணிக்கையிலுள்ள மேற்பார்வை அலுவலர்கள், கீழ்நிலை அலுவலர்கள், சார்நிலை அலுவலர்கள் மற்றும் படையில் சேர்க்கப்பட்ட பிற உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும் அவர்கள், வகுத்துரைக்கப்படலாகும் சம்பளத்தையும், பிற பணியூதியத்தையும் பெறுவார்கள்.

மேற்பார்வை அலுவலர்களைப் பதவியமர்த்துதல் மற்றும் அவர்களுக்குள்ள அதிகாரங்கள்.

4. (1) மைய அரசாங்கம், நபர் ஒருவரைப் படையின் தலைமை இயக்குநராகப் பதவியமர்த்தலாம், மற்றும் பிற நபர்களை, தலைமை ஆய்வாளர்களாக, துணைத் தலைமை ஆய்வாளர்களாக, பாதுகாப்பு அலுவலர்களாக, பாதுகாப்புத் துணை அலுவலர்களாக அல்லது பாதுகாப்பு உதவி அலுவலர்களாகப் பதவியமர்த்தலாம்.

(2) அவ்வாறு பதவியமர்த்தப்பட்ட தலைமை இயக்குநரும், பிற மேற்பார்வை அலுவலர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ வகைசெய்யப்பட்ட அதிகாரங்களையும், அதிகார அடைவையும் உடையவராவார் மற்றும் அவற்றைச் செலுத்தியும் வரலாம்.

படை உறுப்பினர்களைப் பணியமர்த்துதல்.

5. படையில் சேர்க்கப்படும் உறுப்பினர்களாகப் பதவியமர்த்தும் அதிகாரம் தலைமை இயக்குநரிடம் அமைந்திருக்கும். அவர், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கிணங்க அந்த அதிகாரங்களைச் செலுத்திவருவார் :

வரம்புரையாக: இந்தச் சட்டத்தின்படியான அத்தகைய பதவியமர்த்தும் அதிகாரம், மைய அரசாங்கம் இதற்கென ஆணையின் மூலம் குறித்துரைக்கலாகும் மேற்பார்வை அலுவலர் எவராலும்கூடச் செலுத்தப்படலாகும்.

படை உறுப்பினர்களுக்கான சான்றிதழ்கள்.

6. (1) படையில் சேர்க்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், அவருடைய பதவியமர்வின்பேரில், முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், தலைமை இயக்குநர் அல்லது தலைமை இயக்குநர் இதற்கெனக் குறித்துரைக்கலாகும் பிற மேற்பார்வை அலுவலரின் இலச்சினையுடன் கூடிய ஒரு சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்தகுதியின் காரணமாக அத்தகைய சான்றிதழை வைத்திருக்கும் நபரிடம் படையில் சேர்க்கப்பட்ட உறுப்பினருக்கான அதிகாரங்கள் உற்றமையும்;

(2) அத்தகைய சான்றிதழ், அதில் பெயர் குறிக்கப்பட்ட நபர் எந்தக் காரணத்திலேனும், அந்தப் படையில் சேர்க்கப்பட்ட உறுப்பினராக இருந்ததிலிருந்து நீக்கப்படும்போது செல்திறம் அற்றுப்போகும்.

படையின் கண்காணிப்பும் நிருவாகமும்.

7.(1) படையின் கண்காணிப்பு, மைய அரசாங்கத்திடம் உற்றமைந்திருத்தல் வேண்டும், மற்றும் அதற்குட்பட்டும், இந்தச் சட்டத்தின் வகையங்கள் மற்றும் அதன்படி வகுக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றிற்குட்பட்டும், படையின் ஆணை அதிகாரம், மேற்பார்வை மற்றும் நிருவாகம், தலைமை இயக்குநரிடம் உற்றமைதல் வேண்டும்;

(2) உட்பிரிவு (1)இன் வகையங்களுக்குட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் வட்டார எல்லைக்களுக்குள், இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும் அதன்படி வகுக்கப்பட்ட விதிகள் எவற்றிற்கும் இணங்க, தலைமை ஆய்வாளர் ஒருவரால், துணைத் தலைமை ஆய்வாளர் ஒருவரால், பாதுகாப்பு அலுவலர் ஒருவரால், பாதுகாப்புத் துணை அலுவலர் ஒருவரால் அல்லது பாதுகாப்பு உதவி அலுவலர் ஒருவரால், படையின் நிருவாகம் நடத்தப்படுதல் வேண்டும், மற்றும் ஒரு தொழிற்துறை பொறுப்பேற்பு நிறுவனத்தின் காப்பையும் பாதுகாப்பையும் பொறுப்பில் கொண்டுள்ள மேற்பார்வை அலுவலர் ஒவ்வொருவரும், இது தொடர்பாக மைய அரசாங்கத்தால் அல்லது தலைமை இயக்குநரால் கொடுக்கப்படும் பணிப்புரைகள் எவற்றிற்கும் உட்பட்டு, அந்த நிறுவத்தின் மேலாண்மை இயக்குநரின் பொது மேற்பார்வை, பணிப்புரை மற்றும் கட்டுப்பாட்டின்படி அவரது செயற்பணிகளை ஆற்றிவருவார்.

படை உறுப்பினர்களைப் பணியறவு, பணி நீக்கம் செய்தல் முதலியன.

8. அரசமைப்பின் 311 ஆம் உறுப்பின் வகையங்களுக்கும், இந்தச் சட்டத்தின்படி மைய அரசாங்கம் வகுக்கலாகும் விதிகளுக்குட்பட்டு, மேற்பார்வை அலுவலர் எவரும்,—

(i) படையில் சேர்க்கப்பட்ட உறுப்பினர் எவரையும், அவர், தம் கடமையை ஆற்றுகையில் கடமை தவறுவதாகவோ அல்லது கடமையைப் புறக்கணிப்பதாகவோ அல்லது அதற்குத் தகுதியற்றவர் என்றோ கருதுவாராயின், பணியறவு செய்யலாம், பணி நீக்கம் செய்யலாம், அல்லது படிநிலையில் குறைக்கலாம்; அல்லது

(ii) தம் கடமையை, கவனமற்ற அல்லது புறக்கணிக்கும் முறையில் செய்கிற அல்லது அவரது சொந்தச் செயலால் அவரையே அவரது கடமையைச் செய்வதற்குத் தகுதியற்றவராக ஆக்கிக் கொள்கிற, படையில் சேர்க்கப்பட்ட உறுப்பினர் எவருக்கும், கீழ்க்கண்ட தண்டனைகளில் எவையேனும் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ வழங்கலாம், அவையாவன:—

(அ) ஏழுநாள் சம்பளத்திற்கு மேற்படாத தொகையளவிற்கான அபராதம் அல்லது சம்பளவிகிதத்தைக் குறைத்தல் :

(ஆ) உடற்பயிற்சி, மிகையான காவல் பணி, களைப்படையச் செய்யும் அல்லது பிற பணி;

(இ) தனிச்சிறப்பு பதவி எதிலுமிருந்து பணி நீக்கம் செய்தல் அல்லது சிறப்பு ஊதியம் எதனையும் பறித்தல்.

மேல்முறையீடு மற்றும் மேலாய்வு.

9. (1) பிரிவு 8இன்படி இடப்பட்ட ஆணை ஒன்றால் குறையுற்ற படையில் சேர்க்கப்பட்ட உறுப்பினர் எவரும், அவருக்கு அந்த ஆணை தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அந்த ஆணைக்கு எதிராக வகுத்துரைக்கப்படலாகும் அதிகாரிக்கு மேல்முறையீடு செய்யலாம், மற்றும் உட்பிரிவு (3)இன் வகையங்களுக்குட்பட்டு, அதன் மீது சொல்லப்பட்ட அதிகாரியின் முடிபே அறுதியானதாகும்:

வரம்புரையாக: வகுத்துரைக்கப்பட்ட அதிகாரி, மேல்முறையீட்டாளர், உரியகாலத்தில் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதிலிருந்து போதியகாரணத்தால் தடுக்கப்பட்டிருக்கிறார் என்று தெளிவுறக் காண்பாராயின், சொல்லப்பட்ட முப்பது நாள் கால அளவு முடிவடைந்த பின்பும், மேல்முறையீட்டை ஏற்கலாம்.

(2) வகுத்துரைக்கப்பட்ட அதிகாரி, மேல்முறையீடு ஒன்றை முடிவு செய்கையில் வகுத்துரைக்கப்படலாகும் நெறிமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

(3) மைய அரசாங்கம், பிரிவு 8இன்படி அல்லது இந்தப் பிரிவின் உட்பிரிவு (2)இன்படியான நடவடிக்கை எதனுடைய பதிவணத்தையும் தருவித்து ஆய்வு செய்யலாம், மற்றும் அத்தகைய விசாரணை எதனையும் செய்யலாம் அல்லது விசாரணை எதனையும் செய்விக்கலாம், மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குட்பட்டு, அது, பொருத்தமெனக் கருதலாகும் ஆணையை அதன் பேரில் பிறப்பிக்கலாம்:

வரம்புரையாக: உட்பிரிவு (2)இன்படி அல்லது உட்பிரிவு (3)இன்படி கூடுதல் தண்டம் ஒன்றை விதிக்கும் ஆணையை, அத்தகைய ஆணையால் பாதிப்பிற்குட்பட்ட நபருக்குக் கேட்பதற்குத் தகுமான ஒரு வாய்ப்பளிக்கப்பட்டாலன்றி, பிறப்பித்தல் ஆகாது.

படை உறுப்பினர்களின் கடமைகள்.

10. பின்வருவன, படை உறுப்பினர் ஒவ்வொருவரின் கடமையாக இருக்கும், அதாவது:—

(அ) தம்முடைய மேல்அதிகாரியால் தமக்குச் சட்டப்படி இடப்பட்ட ஆணைகள் அனைத்திற்கும் காலந்தாழ்த்தாமல் கீழ்ப்படிதலும், ஆணைகள் அனைத்தையும் நிறைவேற்றுதலும்;

(ஆ) தம்முடைய அதிகாரவரம்புக்குட்பட்ட வட்டார எல்லைக்குள் அமைந்த, மைய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனங்களையும் அந்தப் பொறுப்பேற்பு நிறுவனங்களின் பணியை நடத்துவதற்கு இன்றியமையாதவை என்று அந்த அரசாங்கத்தால் குறித்துரைக்கப்பட்டவாறான பிற கருவிகல அமைப்புகளையும் காத்தலும் பாதுகாத்தலும்:

வரம்புரையாக: மைய அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இல்லாத அல்லது கட்டுப்படுத்தப்படாத கருவிகல அமைப்பு எதுவும், அவ்வாறு குறித்துரைக்கப்படுவதற்கு முன்னர், மைய அரசாங்கம், எந்த மாநிலத்தில் அத்தகைய கருவிகல அமைப்பு அமைக்கப்பட்டுள்ளதோ அந்த மாநில அரசாங்கத்தின் இசைவைப் பெறுதல் வேண்டும்.

(இ) பிரிவு 14இன்படி எந்தப் பிற தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனங்களையும் கருவிகல அமைப்புகளையும் காப்பதற்கும் பாதுகாப்பதற்கும், அவர் அனுப்பப்பட்டுள்ளாரோ அவற்றைக் காத்தலும் பாதுகாத்தலும்;

(ஈ) கூறுகள் (ஆ), (இ) ஆகியவற்றில் சுட்டப்பட்டுள்ள தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனங்கள் மற்றும் கருவிகல அமைப்புகளில் பணிபுரிவோரைக் காத்தலும் மற்றும் பாதுகாத்தலும்;

(உ) கூறுகள் (ஆ), (இ) ஆகியவற்றில் சுட்டப்பட்டுள்ள தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனங்கள் மற்றும் கருவிகல அமைப்புகளையும், கூறு (ஈ) இல் சுட்டப்பட்டுள்ள பணிபுரிவோரையும் நன்கு காப்பதற்கும், பாதுகாப்பதற்கும் உகந்ததான பிற செயல் எதனையும் மேற்கொள்ளுதல்.

பிடியாணையின்றிக் கைது செய்வதற்கான அதிகாரம்.

11. (1) படை உறுப்பினரெவரும்,—

(i) பிரிவு 10இன் கூறு (ஈ) இல் சுட்டப்பட்டுள்ள பணியாளர் எவருக்குமோ, தமக்கோ அல்லது படையின் உறுப்பினர் எவருக்குமோ, அத்தகைய பணியாளராய் அவருடைய கடமையை ஆற்றிவருங்கால் அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய உறுப்பினராக அவருடைய கடமையை நிறைவேற்றி வருங்கால், அத்தகைய உறுப்பினராக அவருடைய கடமையை ஆற்றாதவாறு அவரைத் தடுக்கின்ற அல்லது அச்சமூட்டுகின்ற உட்கருத்துடனோ அல்லது அத்தகைய உறுப்பினராக அவருடைய கடமையைச் சட்டப்படி ஆற்றுங்கால் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்ய முயற்சி செய்யப்பட்ட ஏதொன்றின் விளைவாகவோ, தாமாகவோ உடலூறு விளைவிக்கின்ற அல்லது தாமாகவே உடலூறு விளைவிக்க முயல்கின்ற அல்லது அவரைச் சட்டமுரணாகத் தடைசெய்கின்ற அல்லது தடைசெய்ய முயல்கின்ற, அல்லது தாக்க முனைகின்ற அல்லது தாக்க முனையப்போவதாக அச்சுறுத்துகின்ற அல்லது அவரிடம் குற்றமான வன்முறையை பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்தப்போவதாக அச்சுறுத்த அல்லது பயன்படுத்த முயல்கின்ற நபர் எவரையும்;

(ii) பிரிவு 10இன் கூறுகள் (ஆ) மற்றும் (இ) இல் சுட்டப்பட்டுள்ள தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனம் எதற்கும் சொந்தமான அல்லது அதன் வளாகத்தில் உள்ள சொத்து தொடர்பாக அல்லது அதன் வளாகத்தில் அல்லது அந்தக் கூறுகளில் சுட்டப்பட்டுள்ள பிற கருவிகல அமைப்புகள் அல்லது பிற கருவிகல அமைப்புகளின் வளாகத்திலுள்ள சொத்துக்கள் தொடர்பாகவோ பிடியாணை தேவைப்படும் குற்றச்செயல் ஒன்றில் தொடர்பு கொண்டிருக்கிற அல்லது அதில் அவர் தொடர்பு கொண்டிருப்பதாக அவருக்கு எதிராகத் தகுமான ஐயப்பாடு ஒன்று நிலவுகிற, அல்லது அந்தக் குற்றச்செயலை இழைக்கும் நோக்குடன் அத்தகைய முன் எச்சரிக்கைகளை அவர் மேற்கொண்டிருப்பதாக நம்புவதற்கு இடமளிக்கின்ற சூழ்நிலைகளில் அவர் கலந்து கொள்வதை மறைத்துக் கொள்வதற்கு முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகக் காணப்படுகிற நபர் எவரையும்;

(iii) பிரிவு 10இன் கூறுகள் (ஆ) மற்றும் (இ) இல் சுட்டப்பட்டுள்ள பொறுப்பேற்பு நிறுவனம் அல்லது கருவிகல அமைப்புகள் எவற்றின் தொடர்பான பணி எதையும் நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள நபர் எவருடைய உயிருக்கும் ஆபத்து விளைவிக்கின்ற அல்லது பெரும்பாலும் ஆபத்து விளைக்கக்கூடிய பிடியாணை தேவைப்படும் குற்றச்செயல் ஒன்றை இழைக்கின்ற அல்லது இழைக்க முயற்சிக்கின்ற நபர் எவரையும்

குற்றவியல் நடுவரொருவரிடமிருந்து ஆணை எதுவுமின்றியும், பிடியாணை இன்றியும் கைது செய்யலாம்.

(2) நபர் எவரும், பிரிவு 10இன் கூறுகள் (ஆ) மற்றும் (இ) இல் சுட்டப்பட்ட தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனம் எதனின் வளாகத்திலும் அத்துமீறி நுழைவதாகக் காணப்படுவாராயின், அவருக்கு எதிராக எடுக்கப்படலாகும் பிற கைதுகள் எவற்றிற்கும் குந்தகமின்றி, அவர், படை உறுப்பினர் எவராலும் அத்தகைய வளாகத்திலிருந்து அகற்றப்படலாம்.

பிடியாணை யின்றி சோதனையிடு வதற்கான அதிகாரம்.

12. (1) வகுத்துரைக்கப்பட்ட படிநிலைக்குக் குறையாத படை உறுப்பினர் எவரும், பிரிவு 11இல் சுட்டப்பட்ட அத்தகைய குற்றச்செயல் எதுவும் இழைக்கப்பட்டுள்ளது அல்லது இழைக்கப்படவுள்ளது என்றும், குற்றவாளி தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்காமல் அல்லது அந்தக் குற்றச்செயலுக்கான சான்று மறைக்கப்படுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படாமல், சோதனையிடுவதற்கான அதிகார ஆணையைப் பெற முடியாது என்று நம்புவதற்குக் காரணம் கொள்ளும்போதெல்லாம், அவர் அந்தக் குற்றவாளியைத் தடுத்துவைத்து அவர் உடலையும் உடைமையையும் உடனே சோதனையிடலாம் மற்றும் அவர் முறையானது என்று கருதுவாராயின், அந்தக் குற்றச்செயலை இழைத்திருப்பதாக நம்புவதற்கான காரணத்தைக் கொண்டுள்ள நபர் எவரையும் கைது செய்யலாம்.

(2) சோதனையிடுதல் தொடர்பான குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் வகையங்கள், இந்தப் பிரிவின்படியான சோதனையிடுதல் எந்த அளவு இயலுமோ அந்த அளவுக்குப் பொருந்தும்.

கைது செய்த பின்னர் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறை.

13. இந்தச் சட்டத்தின்படி கைது செய்யும் படை உறுப்பினர் எவரும், அவ்வாறு கைது செய்யப்பட்ட நபரை, தேவையற்ற காலத்தாழ்வின்றி, காவல் அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது காவல் அலுவலர் இல்லாதபோது, அவ்வாறு கைது செய்த சூழ்நிலை குறித்த அறிவிக்கை ஒன்றுடன் சேர்த்து, மிக்க அருகிலுள்ள காவல் நிலையத்துக்கு அந்த நபரை அழைத்துச் செல்லவோ அல்லது அழைத்துச்செல்லும்படி செய்தலோ வேண்டும்.

பொதுத் துறையிலுள்ள தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனங்களுக்கு வேற்றுப் பணியில் அனுப்புதல்.

14. (1) மைய அரசாங்கத்தால் வழங்கப்படலாகும் பொதுப் பணிப்புரைகள் எவற்றிற்கும் உட்பட்டு, பொதுத் துறையில் உள்ள தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனம் ஒன்றின் தொடர்புடைய மேலாண்மை இயக்குநரிடமிருந்து, அந்தத் தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்த கருவிகல அமைப்புகள் எவற்றினையும் காப்பதற்கும், பாதுகாப்பதற்கும் தலைமை இயக்குநர் தேவையெனக் கருதும் எண்ணிக்கையிலான படை உறுப்பினர்களை இதற்கெனப் பெறப்பட்ட கோரிக்கை ஒன்றில் அதற்கான தேவை காட்டப்பட்டதன் பேரில் வேற்றுப் பணிக்கு அனுப்புவது தலைமை இயக்குநருக்குச் சட்டப்படியானதாகும், மற்றும் அவ்வாறு வேற்றுப் பணிக்கு அனுப்பப்பட்ட படை உறுப்பினர்கள் மேலாண்மை இயக்குநரின் பொறுப்பில் இருப்பர்:

வரம்புரையாக: (i) மைய அரசாங்கம் ஓர் உறுப்பினராக இல்லாத அரசாங்க நிறுமத்திற்கு;

(ii) மாகாண அல்லது மாநிலச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ நிறுவப்பட்டுள்ள கழகம் ஒன்றிற்குச் சொந்தமானதாகவுள்ள அதனால் கட்டுப்படுத்தப்படுகிற அல்லது மேலாண்மை செய்யப்படும் பொறுப்பேற்பு நிறுவனம் ஒன்றைப் பொறுத்தமட்டில், அத்தகைய கோரிக்கை எதுவும், அந்தப் பொறுப்பேற்பு நிறுவனம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளதோ அந்த மாநில அரசாங்கத்தின் இசைவுடன் செய்யப்பட்டாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படுதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1)இன்படி தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனம் ஒன்று தொடர்பாகப் படை உறுப்பினர்களை வேற்றுப் பணிக்கு அனுப்புவதற்கெனத் தேவைப்படும் சூழ்நிலைகள் இல்லாமற் போய்விட்டன என்று தலைமை இயக்குநர் கருதுவாராயின், அல்லது வேறு பிற காரணத்தால் அவ்வாறு செய்ய வேண்டியது தேவைப்படுமாயின், அவர், அந்தத் தொழிற்துறை பொறுப்பேற்பு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருக்கு அறிவித்த பின்னர், அவ்வாறு வேற்றுப் பணிக்கு அனுப்பப்பட்ட படை உறுப்பினர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளலாம்:

வரம்புரையாக: அந்த மேலாண்மை இயக்குநர், தலைமை இயக்குநருக்கு ஒரு மாத கால எழுத்துவடிவிலான அறிவிப்பு ஒன்றைக் கொடுப்பதன் பேரில், அவ்வாறு வேற்றுப்பணிக்கு அனுப்பப்பட்ட படை உறுப்பினர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு வேண்டுறுத்தலாம், மற்றும் மேலாண்மை இயக்குநர், அந்த அறிவிப்புத் தேதி முடிவடைவதிலிருந்தோ அல்லது எந்த முந்திய தேதியிலிருந்து அந்தப் படை அவ்வாறு திருப்பி அழைக்கப்படுகிறதோ அந்த முந்திய தேதி எதிலுமிருந்தோ அந்தப் பொறுப்பிலிருந்து விடுபடுவார்.

(3) படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், மைய அரசாங்கத்திற்குச் சொந்தமானதான தொழில்துறை பொறுப்பேற்பு நிறுவனம் தொடர்பாக பதவிப் பணிகளை அவர் ஆற்றி வந்திருப்பாராயின், அவர், வேற்றுப் பணிக்கு அனுப்பப்பட்ட காலத்தில் தம் பதவிப் பணிகளை ஆற்றுகையில், இந்தச் சட்டத்தின்படி அவருக்குப் பொருந்துவதாக இருந்திருக்கக்கூடிய அதே அதிகாரங்களைத் தொடர்ந்து செலுத்துதலும் அதே பொறுப்புகள் ஒழுங்குக் கட்டுப்பாடு மற்றும் தண்டனைகளுக்கு உட்பட்டிருத்தலும் வேண்டும்.

படை அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்கள் எப்போதுமே பணியிலிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும், மற்றும் இந்தியாவில் எங்கு வேண்டுமாயினும் பதவியமர்த்தப் படுவதற்கு உட்பட்டவராவர்.

15. (1) இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், எப்போதுமே பணியிலிருப்பதாகவும் எந்த நேரத்திலும் இந்தியாவிலுள்ள எந்த இடத்திலும் பதவியமர்த்தப்படுவதற்கு உட்பட்டவராகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) படை உறுப்பினர்கள் எவரும், பிரிவு 14இல் வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக, இந்தச் சட்டத்தின்படியான கடமைகள் அல்லாத பிற பணியமர்த்தம் அல்லது பதவி எதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் ஆகாது.

சங்கம் முதலியன அமைத்தல் பொறுத்த கட்டுப்பாடுகள்.

15(அ). (1) மைய அரசாங்கம் அல்லது வகுத்துரைக்கப்பட்ட அதிகாரியின் எழுத்துவடிவிலான முன் ஒப்பளிப்பின்றி படை உறுப்பினர் எவரும்,—

(அ) தொழிற்சங்கம், தொழிலாளர்சங்கம், அரசியல் சங்கம் எதனிலும் அல்லது எவ்வகையான தொழிற்சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் அல்லது அரசியல் சங்கங்கள் எவற்றிலும் ஓர் உறுப்பினராக இருந்தாலோ அல்லது எவ்வகையிலும் அவற்றுடன் இணைந்திருந்தாலோ, அல்லது

(ஆ) படையின் பகுதியாக ஏற்பளிக்கப்படாத அல்லது முழுவதுமாக சமுதாய, கேளிக்கை அல்லது சமயத்தன்மை வாய்ந்ததல்லாத பிற சங்கம், நிறுவனம் அல்லது அமைப்பு எதனினும் ஓர் உறுப்பினராக இருந்தாலோ அல்லது இணைந்திருந்தாலோ, அல்லது

(இ) செய்தித் தொடர்பு அல்லது வெளியீடானது அவருடைய கடமையை நல்லெண்ணத்துடன் நிறைவேற்றுகையில் செய்யப்படுவதாகவோ அல்லது முழுமையாக இலக்கியம், கலை அல்லது அறிவியல் சார்புடையதாகவோ அல்லது குறித்ததொரு தனித்தன்மை வாய்ந்ததாகவோ இருந்தாலன்றி, அவ்வாறு பத்திரிகைகளுடன் தொடர்பு கொள்ளுதலோ அல்லது புத்தகங்கள், கடிதம் அல்லது ஆவணம் எதனையும் வெளியிடுதலோ அல்லது வெளியிடுமாறு செய்தலோ ஆகாது.

விளக்கம்.—இந்த உட்பிரிவின் கூறு (ஆ)-வின்படி சங்கம், நிறுமம், கழகம் அல்லது அமைப்பு எதுவும் முழுமையாக சமுதாய, கேளிக்கை அல்லது சமயத் தன்மை வாய்ந்ததா என்பது தொடர்பாக வினா எதுவும் எழுமாயின், அதன் பேரில் மைய அரசாங்கத்தின் முடிபே அறுதியானதாக இருத்தல் வேண்டும்.

(2) படை உறுப்பினர் எவரும், அரசியல் நோக்கங்களுக்காக அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற நோக்கங்களுக்காக நபர்களின் குழு எதனாலேனும் அமைக்கப் பெறும் கூட்டம் எதிலேனும் பங்கு பெறுதலோ அல்லது உரையாற்றுதலோ அல்லது பொது ஆர்ப்பாட்டம் எவற்றிலும் கலந்து கொள்ளுதலோ ஆகாது.

தற்காலிகப் பணிநீக்கம் செய்யப் பட்டிருக்கும் போது படை உறுப்பினர் களின் பொறுப்புகள்.

16. படை உறுப்பினர் ஒருவர், பதவியிலிருந்து தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்ட காரணத்தால், படை உறுப்பினராக இருப்பதிலிருந்து நீங்கிவிடமாட்டார், மற்றும் அவர், அந்தக் காலத்தின்போது, பணியில் அவர் இருந்திருப்பாராயின்,எந்தப் பொறுப்புகளுக்கும், ஒழுங்குக் கட்டுப்பாடுகளுக்கும், தண்டனைகளுக்கும் உட்பட்டிருந்திருப்பாரோ அதே பொறுப்புகளுக்கும், ஒழுங்குக் கட்டுப்பாடுகளுக்கும், தண்டனைகளுக்கும், உட்பட்டிருப்பார்.

படை உறுப்பினராக இருந்து அதைவிட்டு நீங்குகிற நபர்கள் சான்றிதழ், படைக்கலங்கள் முதலியவற்றை ஒப்படைத்தல்.

17. (1) எந்தக் காரணத்திற்காகவும் படை உறுப்பினராக இருப்பதிலிருந்து நீங்குகிற நபர் ஒவ்வொருவரும், படையில் சேர்க்கப்பட்ட உறுப்பினராக அவர் கடமைகளை ஆற்றுவதற்கு அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள, அவர் அமர்த்தப்பட்டதற்கான சான்றிதழ், படைக்கலங்கள், உடுப்புக்கள், ஆடைகள், மற்றும் பிற பொருட்களை, அவற்றைப் பெறுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள மேற்பார்வை அலுவலர் எவரிடமும் உடனடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி வேண்டுறுத்தப்பட்டவாறு, அவர் அமர்த்தப்பட்ட சான்றிதழ் அல்லது படைக்கலன்கள், உடுப்புகள், ஆடைகள் மற்றும் அவருக்குக் கொடுக்கப்பட்ட பிற பொருட்களை ஒப்படைக்காது வேண்டுமென்றே புறக்கணிக்கும் அல்லது மறுக்கும் நபர் எவரும், தண்டனைத் தீர்ப்பின் பேரில், ஒரு மாதம் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத் தண்டனையோ அல்லது இருநூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவில் உள்ள எதுவும், எந்தப் பொருள் ஒரு நபருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபரின், சொத்தாக, அது தலைமை இயக்குநரின் ஆணைகளின்படி ஆகிறபோது அந்தப் பொருள் எதற்கும் பொருந்துவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

கடமை முதலானவற்றை புறக்கணிப்ப தற்கான தண்டங்கள்.

18. (1) பிரிவு 8இல் அடங்கியுள்ள வகையங்களுக்குக் குந்தகமின்றி, கடமையை மீறுகிற அல்லது மேற்பார்வை அலுவலர் ஒருவரால் வகுக்கப்பட்ட விதி அல்லது ஒழுங்குபடுத்தும் விதி அல்லது சட்டப்படியான ஆணை எதனையும் வேண்டுமென்றே மீறுகிற அல்லது புறக்கணிக்கிற குற்றத்தைப் புரிந்திருக்கிற அல்லது அனுமதியின்றி அவரது பதவிக் கடமைகளைச் செய்யாதிருக்கிற, அல்லது விடுப்பின்பேரில் வாராதிருந்து, விடுப்பு முடிந்தவுடன் தகுமான காரணமின்றி வேலைக்கு வரத் தவறுகிற அல்லது படையின் உறுப்பினராக இருந்துகொண்டே அதிகாரம் ஏதுமின்றி அவரது கடமையல்லாத பிற பணியமர்வு எதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிற, அல்லது கோழைத்தனமான குற்றத்தைப் புரிகிற படை உறுப்பினர் ஒவ்வொருவரும் படைக் காவலில் வைக்கப்படலாம் என்பதோடு தண்டனைத் தீர்ப்பின்பேரில் ஓராண்டுவரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

(2) குற்றவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் உள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தப் பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல் ஒன்று, பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரியதாகவும் பிணையத்தில் விடக்கூடாததுமாக இருக்கும். 2/1974

(2(அ)) குற்றவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் உள்ள எது எவ்வாறிருப்பினும், படையில் சேர்க்கப்பட்ட உறுப்பினர் ஒருவரால் இழைக்கப்பட்டு இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதனையும் அல்லது படையைச் சேர்ந்த மற்றோர் உறுப்பினருக்கு அல்லது அவருடைய சொத்திற்கெதிராக படையில் சேர்க்கப்பட்ட ஒருவரால் இழைக்கப்பட்ட குற்றச்செயல் எதனையும் விசாரணை செய்யும் அல்லது குற்றவிசாரணை செய்யும் நோக்கத்திற்காக, மைய அரசாங்கம், எந்த வகுப்பையும் சேர்ந்த குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும் பாதுகாப்பு அலுவலரிடம் அளிக்கலாம். 2/1974

வரம்புரையாக: (i) குற்றமிழைத்தவர் விடுப்பிலிருக்கும்போது அல்லது பணிக்கு வராமலிருக்கும்போது, அல்லது

(ii) அக்குற்றச்செயல், படையில் சேர்க்கப்பட்ட குற்றமிழைத்த உறுப்பினர் ஒருவரின் கடமைகள் தொடர்புற்றதாக இருக்கும் போது, அல்லது

(iii) அக்குற்றச்செயல் படையில் சேர்க்கப்பட்ட குற்றமிழைத்த ஓர் உறுப்பினரின் கடமைகளுடன் தொடர்புற்றதாக இருந்தபோதிலும், அது ஒரு சிறு குற்றச்செயலாக இருக்கும் போது, அல்லது

(iv) குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலருக்குக் குற்றச்செயல் ஒன்றை விசாரணை அல்லது குற்ற விசாரணை செய்வதென்பது நடைமுறைக்கு இயலாததாக இருக்கும்போது, அதற்கான காரணங்களை எழுத்துவடிவில் பதிவு செய்து

அக்குற்றச்செயலானது, வகுத்துரைக்கப்பட்ட எந்த அதிகாரியின் அதிகார வரம்பு எல்லைகளுக்குள் இழைக்கப்பட்டுள்ளதோ அவர், அவ்வாறு வேண்டுறுத்துவாராயின், அப்பொருட்பாடு தொடர்பாக அதிகாரவரம்பு கொண்டுள்ள வழக்கமான குற்றவழக்கு நீதிமன்றம் ஒன்றினால் விசாரணை அல்லது குற்றவிசாரணை செய்யப்படலாம்.

(3) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும், படை உறுப்பினர் எவரையும் பிற சட்டம் எதனாலும் தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதற்காகவும் அந்தச் சட்டத்தின்படி அவர்மீது குற்றவழக்கு தொடுப்பதைத் தடுப்பதாகவோ, அல்லது அத்தகைய சட்டத்தின்படி இந்தப் பிரிவினால் அத்தகைய குற்றச்செயலுக்காக வகைசெய்யப்பட்டுள்ள பிற தண்டம் அல்லது தண்டனைக்கு அல்லது உயரளவு தண்டத்திற்கு அல்லது தண்டனைக்கு, அத்தகைய சட்டம் எதன்படியும் அவர் உள்ளாவதைத் தடுப்பதாகவோ பொருள்கொள்ளப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: ஒரே குற்றச்செயலுக்காக நபர் எவரும் இருமுறை தண்டிக்கப்படுதல் ஆகாது.

19. காவல் (வெறுப்பினைத் தூண்டிவிடுதல்) சட்டம், 1922 காவல்படை உறுப்பினர்களுக்குப் பொருந்துவதைப்போன்றே படை உறுப்பினர்களுக்கும் பொருந்துதல் வேண்டும்.

சட்டம் படை அலுவவர் களுக்கும் உறுப்பினர் களுக்கும் பொருந்துதல்.

22/1922. 20. கூலி கொடுத்தல் சட்டம், 1936 இல் அல்லது தொழிற்துறைப் பூசல்கள் சட்டம், 1947இல் அல்லது தொழிற்சாலைகள் சட்டம், 1948 இல் தொழிற்துறைப் பூசல்களை ஆராய்ந்து காண்பது மற்றும் தீர்த்துவைப்பது தொடர்பாக ஒரு மாநிலத்தில் செல்லாற்றலிலுள்ள நேரிணையான சட்டம் எதிலும் அடங்கியுள்ள எதுவும் படை உறுப்பினர்களுக்குப் பொருந்துதல் ஆகாது.

குறித்தசில சட்டங்கள் படை உறுப்பினர் களுக்குப் பொருந்துதல் ஆகாது என்பது.

21. (1) படை உறுப்பினர் எவரும், அவரது கடமைகளை ஆற்றுவதில் அவரால் செய்யப்பட்ட செயல் எதற்கும் எதிரான உரிமைவழக்கு அல்லது நடவடிக்கை எதிலும், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு ஒன்றின் ஆணைகளின்படி அந்தச் செயல் செய்யப்பட்டது என்று அவர் வாதிடுவாராயின், அது அவருக்குச் சட்டப்படியானதாகும்.

படை அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களின் செயல்களுக்குக் காப்பளிப்பு.

(2) அத்தகைய வாதுரையை, அந்தச் செயலைச் செய்யும்படி பணிக்கும் ஆணையை முன்னிடுவதன் மூலம் மெய்ப்பிக்கலாம், மற்றும் அது அவ்வாறு மெய்ப்பிக்கப்படுமாயின், அதன் பேரில் படை உறுப்பினர், அந்த ஆணையைப் பிறப்பித்த அதிகார அமைப்பின் அதிகாரவரம்பில் குறைபாடு ஏதேனும் இருந்த

போதிலும், அவரால் அவ்வாறு செய்யப்பட்ட செயலைப் பொறுத்த கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(3) அப்போதைக்குச் செல்லாற்றிலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், படை உறுப்பினர் எவருக்கும் எதிராக, இந்தச் சட்டம் அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதிகளின் வகையங்கள் எவற்றினாலும் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி அல்லது அவற்றையொட்டிச் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட எதற்காகவும், சட்டப்படி எடுக்கப்படக்கூடிய உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கை எதுவும், எந்தச் செயல்குறித்து குற்றமுறையீடு செய்யப்படுகிறதோ அந்தச் செயல் எதுவும் செய்யப்பட்ட பின்னர், மூன்று மாதங்களுக்குள் தொடங்கப்படுதல் வேண்டுமேயன்றி, பிறவாறன்று, மற்றும் அத்தகைய நடவடிக்கை தொடங்கப்படுவதற்குக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பு, தொடர்புடைய அந்த நபருக்கு அத்தகைய நடவடிக்கையையும் அதற்கான காரணத்தையும் குறித்து எழுத்துவடிவிலான அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்.

விதிகளை வகுப்பதற்கான அதிகாரம்.

22. (1) மைய அரசாங்கம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும் முன்சென்ற அதிகாரங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள்,—

(அ) படை உறுப்பினர்களின் வகைகள், படிநிலைகள், தரங்கள், சம்பளம் மற்றும் ஊதியம், படையில் அவர்களின் பணியின் வரைக்கட்டுகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு,

(ஆ) இந்தச் சட்டத்தினாலோ அல்லது அதன் வழியாலோ பதவிப்பணி எதனையும் புரிவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட படை உறுப்பினர்களின் அதிகாரங்களையும் பதவிப் பணிகளையும் கடமைகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு,

(இ) படை உறுப்பினர்களின் பணிக் காலஅளவை நிருணயிப்பதற்கு,

(ஈ) படை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய படைக்கலங்கள், உடுப்புகள், ஆடைகள் மற்றும் தேவையான பிற பொருள்களின் விவரிப்பையும், அளவையும் வகுத்துரைப்பதற்கு,

(உ) படை உறுப்பினர்களின் இருப்பிடங்களை வகுத்துரைப்பதற்கு,

(ஊ) படை நிருவாகம் தொடர்புடைய நோக்கம் எதற்காகவும் நிதியம் எதையும் ஏற்படுத்த, மேலாண்மை செய்ய மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு,

(எ) தண்டனைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் தண்டனை அல்லது அபராதங்களைக் குறைத்தல் அல்லது பிற தண்டங்கள் தொடர்பான ஆணையுரைகளிலிருந்து எழும் மேல்முறையீடுகளைச் செய்து கொள்வதற்கான அதிகாரிகள் எவரென வகுத்துரைப்பதற்கும் அத்தகைய மேல்முறையீடுகளை முடிவு செய்கையில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைக்கும்,

(எஎ) இந்தச் சட்டத்தின்படி நபர்களை அத்தகைய காவலில் வைப்பதற்காகப் பின்பற்றப்படும் நெறிமுறைகள் உட்பட, படையில் காவலில் வைப்பது தொடர்பான பொருட்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு,

(எஎஎ) இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்கள் தொடர்பான வழங்குகளை முடிவு செய்வது பொறுத்த பொருட்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், இந்தச் சட்டத்தின்படி குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட நபர்களை எந்த இடங்களில் சிறை வைக்கலாம் என்பதைக் குறித்துரைப்பதற்கும்,

(ஏ) எந்த வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்ட, பிரிவு 11இன்படி படை உறுப்பினர்கள் வேற்றுப்பணிக்கு அனுப்பப்படலாம் என்பதற்கும் அதற்கான பொறுப்புகளுக்கும், மற்றும்

(ஐ) வகுத்துரைக்கப்படவேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற எந்தப் பொருட்பாட்டிற்கும் அல்லது இந்தச் சட்டத்தின்படி விதிகள் வகுக்கப்பட வேண்டுமென்று வேண்டுறுத்தப்படும் பொருட்பாடு எதனையும் பொறுத்து

வகைசெய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு காலஅளவிற்கு அது அமர்வில் இருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத் தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும், எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்குக் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

## இணைப்புப்பட்டியல்

(பிரிவு 6ஐக் காண்க.)

அ-ஆ என்பவர், மையத் தொழில்துறைப் பாதுகாப்புப்படைச் சட்டம், 1968இன்படி, மையத் தொழில்துறைப் பாதுகாப்புப்படையில் ஓர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டு பதவி அமர்த்தப்பட்ட படையில் சேர்க்கப்பட்ட ஓர் உறுப்பினரின் அதிகாரங்கள், பதவிப்பணிகளை மற்றும் மதிப்புரிமை உற்றமையைப் பெற்றுள்ளார்.